22

கிருஷ்ணன் விருத்தம்.

[மோகனம்]

தாயவள் உரலில் அன்று தயிர் கடைக் கயிற்றுல் கட்ட
ஞாயமாய் அடங்கி நின்றேன் நானிலத் தன்புகொண்டு
நேயமாய் அடிமை பூண்டு நெஞ்சிலை பிணிப்பதல்லால்
பேயன்நீ என்னைக் கட்டிப் பிடித்திடலாகுமோடா.

23

துரௌபதி பாட்டு.

ராகம்-ஆஷா] [தாளம் ஆதி

உலகமெல்லாம்—அருளாலே
நிலைபெருவதும்—அழிவதும் (உலக)
குலதெய்வம் என உன்னை—கருதி
நானே—பணிவேனே
வனமாலி ஜெகதீசா
சர்ஜன பாலா—எமையாளாய்
ஒருநாளும் மறவேனே
சரண கமலம் இறைவனே. (உலக)

24

நாரதர் பாட்டு.

[ராகம்-ஹிந்துஸ்தான் பகாடி]

யமுனை—விஹார—வாசுதேவா
அனுத நாதனே—அபயப்ரபாவா
பிருந்தாவனமே—பரமாத்மா உனை
பணிவாரகமும்—கோயில்கொண்ட தேவா
மதுசூதனனே—மதுரூசதனு
மதுர முரளீ—தானே—ராதா ரமணு. (யமுனை)

சுபம்! சுபம்!! சுபம்!!!

நடிகைகள்.

கிருஹலக்ஷிமி புகழ் P. கண்ணும்பா	...	திரௌபதி.
M. R. வாசுவாம்பாள்	...	குந்திதேவி.
M. N. விஜயாள்	...	சத்தியபாமா.
T. S. கிருஷ்ணவேணி	...	ருக்மணி.
T. A. மதுரம்!		
M. K. பாபுஜி	...	பால குந்தி.

M. R. கனகரத்னம், M. R. ராமலெக்ஷிமி, புஷ்பம்மாள், ராஜீவி, பட்டு, சுலோசனு, லக்ஷிமிகாந்தம், சங்கரி, பத்மாவதி, முதலியோரும் நடிக்கின்றனர்.

தனபாக்யம், ஜானகிபாய், ... டான்ஸ்.
பேபி ரங்கா & சுலோசனு ... குழந்தைகள் டான்ஸ்.

கதையமைப்பு, சம்பாஷணைகள்,

நாகைநல்லூர் லெக்ஷிமி நாருயண பாகவதர்.

பாட்டு,

ஸ்ரீமான்கள், பாபனுசம் சிவன் & ராஜகோபாலய்யர்.

சினாரியோ & டைரக்ஷன்,

R. பிரகாஷ்.

உதவி டைரக்ஷன்	L. S. ராமச்சந்திரன்.
படப் பிடிப்பு	கமால் கோஷ்.
ஒலிப்பதிவு	ஜோதிஷ் ஸின்ஹா.
ஸ்டூடியோ	மோஷன் பிக்ச்சர் ப்ரொடியூலர்ஸ் கம்பைன் லிமிடெட், மதரஸ்.

தயாரிப்பு,

ராஜகோபால டாக்கீஸ், மதரஸ்.

நடிகைகள்.

கிருஹலக்ஷிமி புகழ் P. கண்ணும்பா	...	திரௌபதி.
M. R. வாசுவாம்பாள்	...	குந்திதேவி.
M. N. விஜயாள்	...	சத்தியபாமா.
T. S. கிருஷ்ணவேணி	...	ருக்மணி.
T. A. மதுரம்!		
M. K. பாபுஜி	...	பால குந்தி.

M. R. கனகரத்னம், M. R. ராமலெக்ஷிமி, புஷ்பம்மாள், ராஜீவி, பட்டு, சுலோசனை, லக்ஷிமிகாந்தம், சங்கரி, பத்மாவதி, முதலியோரும் நடிக்கின்றனர்.

தனபாக்யம், ஜானகிபாய், ... டான்ஸ்.
பேபி ரங்கா & சுலோசனை ... குழந்தைகள் டான்ஸ்.

கதையமைப்பு, சம்பாஷணைகள்,

நாகைநல்லூர் லெக்ஷிமி நாரயண பாகவதர்.

பாட்டு,

ஸ்ரீமான்கள், பாபனசம் சிவன் & ராஜகோபாலய்யர்.

சீனாரியோ & டைரக்ஷன்,

R. பிரகாஷ்.

உதவி டைரக்ஷன்	L. S. ராமச்சந்திரன்.
படப் பிடிப்பு	கமால் கோஷ்.
ஒலிப்பதிவு	ஜோதிஷ் ஸின்ஹா.
ஸ்டூடியோ	மோஷன் பிக்ச்சர் ப்ரோடியூலர்ஸ் கம்பைன் லிமிடெட், மதுரஸ்.

தயாரிப்பு,

ராஜகோபால டாக்கீஸ், மதுரஸ்.

உ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ கிருஷ்ணன் தூது

கதை வரலாறு.

பக்தவத்ஸலனான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, துவாரகையில், ஸத்யபாமா, ருக்மணி ஸமேதராய் லீலா விநோத கம்பீரனாக, பரமானந்தத்தோடு இருக்கிறார்.

பரந்தாமனருளால் பஞ்சபாண்டவர்கள், அஞ்ஞாதவாஸம் முடிந்த பின், விராட நகரையடுத்த உபலாவ்யத்தில் இருந்து கொண்டு ஹஸ்தினபுரத்துக்கு தூதனுப்பி உலூகர் மூலம் கேட்க, துரியோதனன் ராஜ்யம் கொடுக்க மறுத்து யுத்தமே உறுதி யென்று கடிந்துரைத்து விடுகிறான்.

இதைக கேட்ட தருமர் யுத்தம் யுத்தம் என்று சித்தப்ரமை கொண்டு, கிருஷ்ணனையழைத்து வரும்படி அர்ஜுனனை ஏவ, அவன் துவாரகைக்கு வருகிறான். அதே சமயம் துரியோதனனும், வரவிருக்கும் யுத்தத்தில், கிருஷ்ணனின் உதவியைநாடி வருகிறான். பரமாத்மா, துரியோதனனுக்கு ஒன்பது கோடி சைன்யங்களைக் கொடுத்தும், அர்ஜுனனுக்கு, யுத்தத்தில் தான் நிராயுதபாணியாக அவன் கக்ஷியில் உதவி புரிவதாகவும் வாக்களிக்கிறார்.

துரியோதனன் பலராமரை சந்தித்துப் பேசிவிட்டு ஹஸ்தினபுரம்சேருகிறான். கிருஷ்ணன், சாத்தகி, பலராமர் முதலியவர்களுடன் அர்ஜுனன் உபலாவியம் வருகிறான்.

ஹஸ்திநபுரத்திலிருந்து வந்த ஸஞ்ஜய முனிவர் தர்மாதிகளுக்கு எவ்வளவோ ஹிதோபதேசம் செய்தும் பயன்படாமல் திரும்புகிறார்.

உபலாவியத்தில், விராட ராஜன் தலைமையில் கூட்டப் பட்ட ஆலோசனை சபையில், பலராமருக்கும் சாத்தகிக் கும் பலமான வாக்குவாதம். கிருஷ்ணன் ஒவ்வொரு வரின் அபிப்ராயங்களையும் கேட்கிறார். தருமரின் சமா தான வார்த்தை. பீமனின் கட்டுக்கடங்காத கோபம். அர்ஜுன சகுலர்கள் வருத்தம். ஸஹாதேவனின் தர்க்கம். அவன் கிருஷ்ணனை (மூலவுருவத்தை), தன் யோக பலத் தால் கட்டிவிட, பிறகு அவனுக்கு வரம் கொடுத்து கிருஷ்ணன் விடுபடுகிறார்.

துரியோதனுதியரிடம் சமாதானம் செய்து கொள்ளும் படி சொல்லி துரௌபதியை கிருஷ்ணன் சோதிக்க, அவள் கதறியழுகிறாள். முடிவில் அவளது சபதங்களை நிறை வேற்றுவதாக சத்யம் செய்து கொடுக்கிறார் கிருஷ்ணன்.

பரமாத்மா, ஹஸ்திநபுரத்துக்கு தூது போவ தாகத் தீர்மானிக்கப்பட்டு, பலராமரிடம், புறப்பட உத்தி ரவு பெற்றுக்கொள்ளும் சமயம், தனது மாயா சக்தியால், தானே ஒரு பசுவாகி, பலராமர் மூலம் அதைக்கொல்லும் படி செய்து ஏமாற்றி, பிறகு அவரை, துரியோதனுதி யருக்கு உதவி புரியாவண்ணம் தீர்த்தயாத்திரைக்கு அனுப்பி விடுகிறார்.

ஹஸ்திநபுரத்தில், கிருஷ்ண பரமாத்மாவை வர வேற்க, பலவகையான ஏற்பாடுகள். ஆடல் பாடல்கள் அமோகம். சாத்தகி சமேதராய் கிருஷ்ணன், ஹஸ்தின

புரத்து வீதியில் வரும்பொழுதே பரமாத்மாவின் பரம பக்தனுகிய விதுரரின் வீட்டில் நுழைந்து, அத்தை குந்தி தேவியுடன் பேசி, பிறகு விதுரரால் உபசரிக்கப்பட்டு, அவர் கொடுத்த பழத்தோல்களையும் உப்பிலாக்கூழையும் உவகையோடுண்டு, நான்கு கைகளோடும் விதுரருக்கு காக்ஷி யளித்து அனுக்ரஹிக்கிறார்.

பகவான் பிறகு துரியோதனனின் தர்பாருக்கு வருகிறார். துரியோதனன் கோபங்கொண்டு பேசுகிறான். பாண்டவர்களின் பாதிராஜ்யத்தை கொடுக்கும்படி கிருஷ்ணன் கேட்கிறார். பெரியோர்கள் துரியோதனனுக்கு புத்திமதிகள் சொல்லுகிறார்கள். கண்வர் துரியோதனனைச் சபித்திடுகிறார். பிறகு துரியோதனன், பாண்டவர்களுக்கு ஊசிமுனை குத்துமளவு நிலங்கூடக் கொடுக்கமறுத்து கிருஷ்ணனைப் பலவாறுக ஏசுகிறான். கிருஷ்ணன், தர்பாரிலிருந்து புறப்பட்டு அசுவத்தாமரிடம், சேனுதிபத்யம் வஹித்தல் பற்றி சதிசெய்து ஏமாற்றுகிறார்.

இதைக் கவனித்த துரியோதனன் அசுவத்தாமரைக் கோபித்து, அவருக்கு சேனைத்தலைமை கொடுப்பதில்லை என, சத்தியம் செய்கிறான்.

கிருஷ்ணன், தேவேந்திரன் மூலம், கர்ணனிடமிருக்கும், கவசகுண்டலங்களை யாசித்து வரும்படி செய்கிறார்.

இரவில், துரியோதனனின் துர்சுவப்னங்கள். கிருஷ்ணபரமாத்மா, துரியோதனனுக்கு, கால்பிடிக்கும் கந்தனாக ஏற்பட்டு, சேவை செய்து, பக்தனுகிய கந்தனுக்கு அனுக்ரஹம் செய்கிறார்.

துரியோதனன் இரவில் பீதியதிகரித்து, சகுனி முதலிய துஷ்டார்களுடன் சதியாலோசனை செய்கிறான். கிருஷ்ணனை எப்படியும் சிறை செய்து கொன்றுவிடத் தீர்மானம் செய்கின்றனர். சிறுவன் விகர்ணன் ஆக்ஷேபனை செய்கிறான். கடைசியில், மறுதினம் தர்பாரில், கிருஷ்ணனை, தாங்கள் தயார் செய்யும் படுகுழியில் தள்ளிவிடத் தீர்மானிக்கப்படுகிறது.

விதுரர் வீட்டில் கிருஷ்ணன், தனது அத்தை குந்தி தேவிக்கு, கர்ணனது பிறப்பைப்பற்றித் தெளிவாக்குகிறார். குந்திதேவி கர்ணனிடம் வந்து, தான் கன்னியாயிருந்த காளில் நடந்த விஷயங்களை விவரமாகக் கர்ணனிடம் சொல்ல, இந்த உண்மையை யறிந்த கர்ணனும், கதறி யழுது, ஒவ்வொருவரும், இரண்டிரண்டு வரங்கள், வாங்கிக் கொண்டபின், தாயும் மகனும் பிரிந்து போகின்றனர்.

மறுதினம், துரியோதனன் தர்பாருக்கு, பரமாத்மா விதுரருடன் வருகிறார். பக்தி மேலீட்டால், விதுரரின் ஆனந்தக்கூத்து. துரியோதனன் கோபித்து, விதுரரை, தாசி மகன் என்று ஏசுகிறான். விதுரரின் ரௌத்ராகார மான கோபம். தன் வில்லை ஒடித்துத் துரியனிடம் வீசி எறிகிறார். போர் செய்வதில்லை என்று சத்தியமும் செய் கிறார்.

பீஷ்மருக்கும் கர்ணனுக்கும் வாக்குவாத மேற்படு கிறது. கர்ணன்சபதம். துஷ்டர்களின் சூழ்ச்சியை அறிந்த பகவான், தானும் சூழ்ச்சியாகவே, சகுனியை அந்தப் படுகுழியில் தள்ளி விடுகிறார். துஷ்டர்கள் பகவானைக்கட்ட நெருங்குகிறார்கள். திடீரென்று விராட் புருஷன் திவ்ய விசுவரூபமெடுக்கிறார். பெரியோர்களின் பரமானந்தம்,

திருதராஷ்டிரனுக்கு அச்சமயம் கண்களிரண்டும் தெரிவது அற்புதம்.

அவனது கோரிக்கையின்பேரில், திருதராஷ்டிரனுக் குக்கொடுத்த கண்களை, தானே அவித்திடுகிறார்.

பகவான், ஹஸ்தினபுரம் விட்டு உபலாவ்யம் வந்து, பஞ்சபாண்டவர்களுக்கு திவ்யதெரிசனம் தந்தருளி ரக்ஷிக்கிறார்.

சுபம்!

சுபம்!!

சுபம்!!!

ஓ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ கிருஷ்ணன் தூது

பாட்டுகள்.

1 கோரஸ்.

ராகம்-மோஹன் கல்யாணி] [தாளம் ஆதி

ஸ்ரீ மாதவனே மழைநிறத்தவனே
மங்களதேவ மனோஹரனே

பதமலரே பணிபவர்க்கருள் முகுந்தா
பாம்பணைமேல் பள்ளி, கொள்ளும்வைகுந்தா
வேத போத நீத, நாத முராரீ
சதமுனி, நிஜ யதுகுல அவ தாரீ.

புனிதா வரதா சுகிர்தா
பூதனை உயிர் குடித்தவா—கரிவரதா காவா—

அடியார் உறவே அமுதே உனதோர்
[குணமுறை செயவே

வேறுளபல மா நலமதுவே தருமெனவே
வேதமெலாம் ஓலமிடும் விதாண குணவரதா
விஜயனின் துணை வனே வா
விகசித மலர்ப்பதம்—தா. (ஸ்ரீ)

2 கிருஷ்ணன் பாட்டு.

ராகம்-ஹிந்துஸ்தான் ப்யாக்] [தாளம் ஏகம்

இணையேயில்லாத எங்கள் இடையர் குலம்
இடையர்குலம் மனது இரங்கும் குலம் (இணை)

மனைதவறுமல் பசுமாடு கட்டியே யிருக்கும்
மாசறவே மனது உல்லாசத் துடனிருக்கும் (இணை)

மணக்கமணக்க நெய்யும் மதுரமிகுந்த பாலும்
மா நிலத்தோர்க்குதவும் மாதவமே புரிந்த (இணை)

3 பாமா தோழிகள் தர்க்கம்.

ராகம்-ஹிந்துஸ்தான் ஸாரங்கா] [தாளம் ஆதி

பாமா:—அன்புடைய தோழிமாரே, ஆடுவோமின்னேரம்

1 தோழி:—இன்பாருமிவ்வதிகாலை-எழுந்தேவருசூரியன்மேலே

2 தோழி:—இதுபாரீர், ம்ருதுவான மலர்மேலே

3 ,, வண்டினமது உண்டிசை பாடி
கொண்டிளங் குயிற்கூவுது கூடி

பாமா:—எதாலுலும் எல்லாம் நாதன் இல்லாதிங்கே
யாவும் சுகந் தரு மோடி

எல்லோரும்:—இதேலை வீணை யாவும்—இங்கிருந்து நாமே
அன்புடைய தோழிமாரே ஆடுவோமின்னேரம்.

4 பாமா.

ராகம்-ஹிந்துஸ்தான் பஹார்] [தாளம் ஆதி

பரிஹாஸ மேலை மாயா பக்தர்களின் ஸஹாயா
பாராயோ எந்தன் நேயா பருகிடும் வெண்ணை வாயா
தாராயோ சேவை தானே நிகர் தனியாளான நானே
முறையோ என்மன மோஹன் முரளீ தரா நீவாவா
நீவா வா நீவா வா நீவா வா

ஓஹோ ஹோநீ ஒளியாதே உனை
விடுவே னென் றெண்ணுதே
உன் வேணு கான நாதம்
ஒலிப்பது கேட்டே னிப் போதே. (பரி)

5 பாமா கிருஷ்ணன் தர்க்கம்.

ராகம்-ப்யாக்] [தாளம் ஆதி

இருவரும்:—ப்ரேம சுபாவிக பந்தமதுலகே

பாமா:—சராசரமெலாம் சதா வாழ்வதும்
சுகாநந்தமய சோபிதம் யாவும்

கிருஷ்ணன்:—போகயோகமும் புண்ய லோகமும்
பூவினில் வாசம், போலுத்ஸாகமும்

இருவரும்:—பொருந்திட இருவரும், பூவில் வாழ்வதும். (ப்ரேம)

6 ருக்மணி (துளசி பூஜை)

ராகம்-ஹிந்துஸ்தான் கமாஸ்] [தாளம் ஆதி

அம்பா துளஸி தாயே,—
நம்பினேன் நீயருள் வாயே (அம்பா)

அம்போருஹ நிகர் மாமுகம், அருள் பொங்கு மழகே
நான் மறவேனொரு நாளிலு மம்மா, நாமாம்ருதஜபமே
நித்தமு மென், நாவிலூறும் எங்கு முறையும் தேவி (அம்பா)

காதணி குண்டல சோபையும் கண்டார்க் குண்டாமோ
காசினி மேற்கருவாதனை எதினி
காரண ரூபிணியே. (அம்பா)

7 துரௌபதி பாட்டு.

ராகம்-இந்துஸ்தான்] [தாளம் ஆதி

தரும மிது வோ—நாதா
வேதாந்தம் பேசலாமோ (தரும)

துரியோதனுதி துஷ்டர் பூமியாளல் நீதியோ
சுத்த வீர க்ஷத்திரியர்க்கு (தரும)

உயர்மானம் போன பின்பு உயிர்
வாழல் வீரமோ துயர் தீரோன் கூந்தல் வாரோன் (தரும)

8 துரியோதனன் பாட்டு.

ராகம்-மோஹனம்] [தாளம் ஆதி

எனைநிகர் பவரினி யாரே இலரே
இருவுலகிலு மெவரே—மாமா (எனை)

சேனைகளும் ஓர் ஒன்பது கோடி
கனைகுழற்க் கடல் போல் கண்ணனும் தந்தான்
எனைத்துணை கொள்ள வருவார் மாமா (எனை)

9 ஸஞ்சயர் பாட்டு.

ராகம்-கானடா] [தாளம் ஆதி

தாரணி வாழ்வது தாரக மாமா
போரணி வகுத்தே புரிந்திட லாமா (தார)

கனியிருந்திடவே காய் கவர்வாரோ
பனித்துளி யருந்திப் பயன் பெருவாரோ (தார)

அசினில் மோகம் அறிந்திடு போகம்
அரைநொடி யாகும் அழிந்தவை போகும். (தார)

10 ஸஹாதேவன் விருத்தம்.

[ராகம்-செஞ்சுருட்டி]

நீ பாரத வமரில் யாவரையு நீராக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல் வண்ணு!
கோபாலா! போரே ரே! கோவிந்தா! நீயன்றி
மாபாரத மகற்ற மற்றூர் கொல் வல்லாரே!

11 துரௌபதி கிருஷ்ணன் தர்க்கம்.

ராகம்-ஹிந்துஸ்தான் பஹடி கமாஸ்] [தாளம் ஆதி

துரௌபதி:—நீதியிதோ இனி நீர்சமாதானம்
செய்தாலது ஞாயமாமா

கிருஷ்ணன்:—மதிகேடையார் மனுஷிலை கொடிதே
எதுவேண்டாம் சோக மீதே

துரௌபதி:—ஆதியி லென்னை அவமதித்தாரே
ஆருவதேதவர் த்ரோஹம்—ஹா—இனி

கிருஷ்ணன்:—த்ரோஹிகளின் உயிர் போக்கிடவே நான்
செய்குவேன் சூழ்ச்சியதே

துரௌபதி:—இது நிஜமா நம்பலாமா

கிருஷ்ணன்:—போரினில் துரியன்—துடைமேல் கதையால்
பீமனுமே அடிப்பான்—பார் நிஜம்
பீமனுமே அடிப்பான்.

12 கிருஷ்ணன் ச்லோகம்.

[ராகம்-எதுகுலகாம்போதி]

சலேத்தி ஹிமவான் சைலஃ
மேதினீ சததா பவேத் |
த்யௌஃ பதேத்ச ஸநக்ஷத்ரா
நமே மோகம் வசோ பவேத் ||

13 விதுரர் ச்லோகம்.

[ராகம்-நாதநாமக்ரியை]

ஹே கோபாலக! ஹே க்ருபா ஜலநிதே! ஹே ஸிந்து கன்யாபதே!
ஹே கம்ஸாந்தக! ஹே கஜேந்த்ர கருணாபாரீண! ஹே மாதவ!
ஹே ராமானுஜ! ஹே ஜகத்ரயகுரோ! ஹே புண்டரீ காக்ஷ! மாம்
ஹே கோபீஜன நாத! பாலய பரம் ஜானுமி நத்வாம்விபு.

13

14 கிருஷ்ணன் விருத்தம்.

[ராகம்-காம்போதி]

ஒருமகர்க் காகக்கோடி யுறுதவமியற்று வாரே
தருமொரு நூறுமக்கள் தனையிழந் தலறிடாது
இருநிலத்திருக்க வென்னில் இதததியுனது சேய்க்குத்
தருநிகர்த் தருமன்றடு தந்திடப் பணித்திடாயே!

15 கிருஷ்ணன் குந்திதேவி தர்க்கம்.

ராகம்-ஹிந்துஸ்தான் மிஸ்ரமல்லார்] [தாளம் ஆதி

குந்தி:—கபட நாடக மாயாவதாரீ—கர்ணனும்
என்மகன் என்ன முன்னரே—நீ
மொழிந்திலை பாராய்
இப்பொழு துறைத்தே இடர்க்கடல் கண்டனை
இதோ சரி உனக்கே தான்—ஆஹா

கிரு:—இனித்தான் என்னை இன்னும் யாதோ
உண்மை யதே சொல்ல லாகாதா

குந்தி:—துராத் மாக்களின் கூடச் சேர்ந்தவன்
சொல் மொழியாவும் நம்பானே

கிரு:—தொல் வினையை யெண்ணுவதாலுளதோ
துரிதமாய்ப் போய் உறவாடு

குந்தி:—ஒருபொழுதவனும் உடன்பட மாட்டான்
போது மிதே ஒரு—வீண் வாதா

கிரு:—வாதா...வாதா—தீதுற வருகிலா திரு
வரமே கொள்வாய் நீ தான்

குந்தி:—வரமவை யாவோ கூறு வாயினி
வாராது அவனே போனால்

கிரு:—ஒரு முறை அரவாஸ்திரமது விடவே
வரமே வாங்கி நீ வாராய்.

16 குந்தி விருத்தம்.

ராகம்-கல்யாணி — கேதாரகௌளம்]

கன்னியாயிருந்த நாளில் கடுகி துர்வாஸர் வந்து
என்னிட மைந்து மந்த்ரம் எடுத்துப தேசித்தாரே
முன்னைய சூர்ய மந்த்ரம் உன்னிட மங்கையாகி
உன்னையும் பெற்று நானோர் துகிலொடு கங்கைசேர்த்தேன்.

17 குந்தி விருத்தம்.

தம்பியரைந்து பேரும் தனித்தனி ஏவல் செய்ய
வம்பவிழலங்களோடு மாமணி மகுடம் சூட்டி
அம்புவி முழுதும் நீயே ஆளலாம் வருவா யென்னில்
உம்பரும் புகழ்வா ருன்னை உண்மையீ தறிகுவாயே.

18 குந்திதேவி பாட்டு.

ராகம்-ஹிந்துஸ்தான் பஹடி] [தாளம் ஆதி

ஜெகஜ்ஜோதி ரூபதேவா வா தினமாமணியே

தொகையறு

பகலவனே, பகவானே பாதமதே பணிவேன் நிதமே
ஐவரொடு என்மகனும் இன்றிதோ, என்முனே இவனும் (ஜெ)
நானிலம் தொழும் தெய்வபோதா—நானுன்
[அடிமை நாதா, வேதா (ஜெ)
பூவினில் போர்வைபோல் பொதி இருளே போக்கும்
[பான்மையென
உண்மைபெற உள்ளந்தான் ஏதோ உணர்வி யிப்போதே. (ஜெ)

19 கர்ணன் விருத்தம்.

மடந்தை பொற்றிருமேகலை மணியுகவே மாசறத்திகழுமேகாநத
விடந்தனிற்புரிந்தே யானயர்ந்திருப்ப எடுக்கவோ
[கோர்க்கவோ என்றுன்
திடம்படுத்திடவே லிராசாராசனுக்குச் செருமூனைச்சென்று
[செஞ்சோற்றுக்
கடன்கழிப்பதுவே யெனக்கினித்தருமமும் கருமமும்
[புகழும் அம்மா!

20 விதுரர் விருத்தம்.

[ராகம்-சிம்மேந்திரமத்யம்]

கல்லினுங்கடிய நெஞ்சக்கசட, நீ கடிந்து எந்தன்
வில்லினைப்பழித்து என்மேல், வீண்பழிச் சொற்களிங்கு
சொல்லியதாலே டோரில் சோர்ந்தழிந்திடுவாய், யானும்
வில்லினைமுறித்தேதன் மற்றுமொருவர்க்கும் துணையும் செய்யேன்.

21 துரௌபதி விருத்தம்.

[அசாவேரி]

ஓ கண்ணு கண்ணிலேயோ
என்னுளவின் செங்கமலம்
நேர்கண்ணு உன்னடியாள்
யென்மனம் காராயோ யென் கண்ணு
செவி செவிடோ திவலை அருள்
தாராயோ ஹாகண்ணு! கஜ வரதா!
யார்துணை பாராயோ பாராயோ
பாராயோ.

Krishnan Thoothu.

கிருஷ்ணன் தூது.

நடிகர்கள்.

சிறுகளத்தூர் சாமா	...	கிருஷ்ணன்.
விசலூர் சுப்ரமண்ய பாகவதர்	...	துரியோதனன்.
நாகைநல்லூர் லெக்ஷிமி நாராயண பாகவதர்	...	விதுரர்.
சாண்டோ நடேச பிள்ளை	...	கர்ணன்.
D. பால சுப்ரமண்யம்	...	பலராமர்.
S. S. மணி பாகவதர்	...	தர்மர்.
Battling. C. S. தன்சிங்	...	பீமன்.
R. S. ராமஸ்வாமி அய்யங்கார்	...	அர்ஜுனன்.
K. V. கிருஷ்ணன்	...	நகுலன்.
கொத்தமங்கலம் ராமசாமி	...	சகாதேவன்.
M. R. துரைராஜ்	...	சாத்தகி.
M. A [illegible]ணபதிபட்	...	அஸ்வத்தாமா.
M. S [illegible]வலாயுதம்	...	தேவேந்திரன்.
T. G [illegible]பால் ராவ்	...	விராடராஜன்.
L. நாராயண சோமயாஜலு	...	ஸஞ்ஜயர்.
C. சின்னையா	...	திருதராஷ்டிரன்.
K. S. A. சாமி	...	பீஷ்மர்.
M. திருவேங்கடம்	...	துச்சாசனன்.
K. தேவநாராயணன்	...	விகர்ணன்.
T. M. பாபு	...	துர்வாசர்.
P. G. வெங்கடேசன்	...	நாரதர்.
N. S. கிருஷ்ணன்!		
காமேடியன் ஜாலிகிட்டு அய்யர்	...	சகுனி.
,, E. கிருஷ்ணமூர்த்தி...		கந்தன்.
,, குஞ்சிதபாதம் பிள்ளை	...	ரங்கன்.